**OPEN ACCESS**

Manuscript ID:
TAM-06032022-4632

Volume: 6

Issue: 3

Month: January

Year: 2022

P-ISSN: 2454-3993

E-ISSN: 2582-2810

Received: 05.10.2021

Accepted: 20.1.2021

Published: 01.01.2022

Citation:
Ganesan, A. "Paripadal Reveals Tamil Thoughts." *Shanlax International Journal of Tamil Research,* vol. 6, no. 3, 2022, pp. 97–103.

DOI:
https://doi.org/10.34293/tamil.v6i3.4632

*Corresponding Author:
ganesanrjpm1972@gmail.com

This work is licensed under a Creative Commons Attribution-ShareAlike 4.0 International License

# Paripadal Reveals Tamil Thoughts

**Dr. A. Ganesan**
*Guest Lecturer in Tamil*
*Government College of Arts and Science, Sivakasi, Tamil Nadu, India*
http://orcid.org/0000-0003-2535-5476

**Abstract -** Our Tamils are the ones who divided the ancient Tamil Nadu which appeared five thousand years ago into five types of lands and divided the first, nucleus and subject matter separately for each people. The themes, drums and musical instruments found in the themes contributed to the development of the Tamil language and literature. Among the Sixty-four arts, music is the most sacred. Music was a separate genre long before the development of human civilization. Man expressed himself through music at a time when emotions could not be expressed through language. Thus the article sets out to illustrate the musical concepts found in the parable.

**Keywords:** Paripadal, Tamil Music, Musical Instruments, Drum Music.

**References**

1. Dr. Subhas Chandra Bose, Tolkappiyam Porulathigaram, p.252.
2. Dr. Subhas Chandra Bose, Ibid, p.257.
3. Dr. Subhas Chandra Bose, Ibid, p.257.
4. Dr. Subhas Chandra Bose, Ibid, p.392.
5. Dr. Subhas Chandra Bose, Paripadal, Uraisirappayiram, pp.11-12.
6. Pera.Vipulananda Adigal, Jaffna, p.16.
7. Dr. K.V. Balasubramanian, Paripadal, (21: 33-38)
8. Dr. K.V. Balasubramanian, Ibid, p.454.
9. Dr. K.V. Balasubramanian, Ibid, p.185.
10. Dr. K.V. Balasubramanian, Ibid, p.377.
11. Dr. K.V. Balasubramanian, Ibid, p.189.
12. Dr. K.V. Balasubramanian, Ibid, p.496.
13. Dr. K.V. Balasubramanian, Ibid, p.352.
14. Dr. K.V. Balasubramanian, Ibid, p.134.

# பரிபாடல் புலப்படுத்தும் தமிழிசைச் சிந்தனைகள்

*முனைவர் அ. கணேசன்*
கௌரவ விரிவுரையாளர், தமிழ்த்துறை
அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, சிவகாசி

**ஆய்வுச் சுருக்கம்**
*தொன்மைத் தமிழகத்தை ஐவகை நிலங்களாகப் பகுத்து, ஒவ்வொரு மக்களுக்கும் தனித்தனியாக முதல், கரு, உரிப்பொருள்களைப் பகுத்துக் காட்டினர் தமிழர்கள். கருப்பொருள்களில் காணப்படும் பண், பறை இசைக்கருவிகள் ஆகியன தமிழ்ப் பண்பாட்டு வளர்ச்சியைச் சுட்டுகின்றன. மனித நாகரிக வளர்ச்சிக்கு முன்பே இசைக்கலை தனியொரு வகையாக விளங்கியது. மொழி மூலம் உணர்ச்சிகளை வெளிப்படுத்த முடியாத காலத்திலேயே மனிதன் இசை மூலமாக வெளிப்படுத்தினான். அவ்வகையில் பரிபாடலில் காணப்படும் இசைப்பற்றிய கருத்துக்களை விளக்குவதாய் இக்கட்டுரை அமைகிறது.*
***முக்கியச் சொற்கள்:*** *சங்க இலக்கியம், பரிபாடல், தமிழிசை, இசைக்கருவிகள், பறை, பண், இசைக்கலை*

## இசை – விளக்கம்

"இசை" என்ற சொல்லிற்கு இசைதல், இணங்குதல், ஓசை வெளிப்படுதல் என்ற பொருள்கள் உண்டு. தொல்காப்பியர் "இசை" என்ற சொல்லை "தூக்கு" என்று குறிப்பிடுகிறார். சங்க இலக்கண நூலான தொல்காப்பியம் இசை பற்றிக் கூறுவதை அறியமுடிகிறது. புலவர்கள் தாம் இயற்றும் பாக்கள் இன்ன இன்ன ஓசையில் (இசை) தான் அமைந்துள்ளன எனப் பாடல் முடிவில் குறிப்பிடும் நிலையைக் காணும்போது, செய்யுள்களின் ஓசையைப் பற்றி உணரமுடிகிறது.

எழுத்துக்களைச் சீர்களாகவும், அசைகளாகவும் ஆக்கம் செய்த தொல்காப்பியர், புலவர்களின் பாக்கள் ஒவ்வொன்றும் இன்னின்ன ஓசை களைக் கொண்டவை என உறுதிப்படக் கூறியுள்ளார். ஓரடியில் நான்கு சீர்களைக் கொண்ட வெண்பாக்கள் "செப்பலோசை"யையும், ஈற்றயலடி முச்சீராக அமையப்பெற்ற ஆசிரியப்பா அகவலோசையால் ஒலிக்கும் என்கிறார். மூன்றாவதாக உள்ள கலிப்பா என்பது துள்ளல் ஓசையையும், வஞ்சிப்பா என்பது தூங்கலோசையையும் பெற்று வரும். இவ்வோசைகள் பற்றிய செய்தியை நூலில் நவின்றுள்ளார் புலவர். வெண்பா செப்பலோசை பெற்று ஒலிக்கும் என்பதை, "அஃது அன்று என்ப வெண்பா யாப்பே".[1] என்ற நூற்பாவால் தெளிவாக்கியுள்ளார். இதன் வகைகளான ஏந்திசைச் செப்பலோசை, தூங்கிசைச் செப்பலோசை, ஒழுகிசைச் செப்பலோசை ஆகியனவும் இசைகளை உணர்த்துவதாக உள்ளது. ஆசிரியப்பா, அகவலோசையால் இசைக்கும் என்பதை,

**"அகவல் என்பது ஆசிரியம்மே".[2]**

என்று கூறுவார் புலவர். ஏந்திசைச் செப்பல், தூங்கிசைச் செப்பல், ஒழுகிசைச் செப்பல் என இதன் வகைகளைச் சார்ந்து வரும் பாக்கள் தனித்தனியாக ஒலிக்கும் என்கிறார். ஓசைகள் ஒழுங்குபட அமையாமல், இடையிடையே உயர்ந்து ஒலிக்கும் தன்மை கொண்டதாக கலிப்பாப் பாடல் அமையப் பெறும் என்பதைத்,

**"துள்ளல் ஓசை கலியென மொழிப".[3]**

எனக் குறிப்பிட்டு, அதன் வகைகள் ஏந்திசைத் துள்ளல், அகவல் துள்ளல், பிரிந்திசைத்

துள்ளல் எனவும் வரும் என்கிறார். மென்மையாக ஒலிக்கும் காரணத்தாலும், அடிதோறும் தொடர்ந்து செல்லாது சீர்தோறும் ஆங்காங்கே தொங்கும் ஓசைநயம் பெற்ற வஞ்சிப்பா தூங்கலோசையைப் பெற்று வரும் என்பதைத்,

**“தூங்கல்தானே வஞ்சி ஆகும்”.**[4]

எனவும் கூறுவார் தொல்காப்பியர். இதுவும், இதன் வகை மூன்றும், பாக்கள் இசைத்தலுக்கு முக்கியமானதாகும். தொல்காப்பியர் கூறிய பாக்களின் அடியொற்றியே இசைகளும் இசைக்கப்பட்டன. இலக்கியங்களும் அதன் அடிப்படையிலேயே இயற்றப்பட்டன.

## இசைகளும் இசைக் கருவிகளும்

தமிழில் வழங்கப்பெறும் இசைகள் ஏழு. அவை குரல், துத்தம், கைக்கிளை, உழை, இளி, விளரி, தாரம் என்பனவாம். இத்தமிழிசையை வடமொழியாளர் மத்திமம், பஞ்சமம், தைவதம், நிஷாதம், ஷட்ஜம், ரிஷபம், காந்தாரம் என வழங்குவர். இத்தமிழிசைகள் நம் உடல் உறுப்புகளில் பிறக்கும் “எனவும் குறித்துள்ளனர். மிடற்றினால் குரலிசையும், நாவினால், துத்தமிசையும், அண்ணத்தால் கைக்கிளையிசையும், சிரத்திலிருந்து உழையிசையும், நெற்றியிலிருந்து இளியிசையும், நெஞ்சை இடமாகக்கொண்டு விளரியிசையும், மூக்கால் தாரமிசையும் பிறப்பதாகக் குறித்துள்ளனர் பண்டைத் தமிழர்கள்.

தாம் இயற்றிய செய்யுள்களுக்கு ஏற்ற இசையையும், அதற்கியைந்த இசைக் கருவிகளையும் கொண்டு பண்டைக்காலப் பாணர்கள் பாடி மகிழ்ந்துள்ளனர். இப்பாடல்களின் இசைக்கு உரிய ஓசைகள் ஐந்து பொருள்களிலிருந்து பிறக்கின்றன. அப்பொருள்கள் தோல் கருவி, துளைக் கருவி, நரம்புக் கருவி, கஞ்சக் கருவி, மிடற்றுக் கருவி என்பனவாம். தோல் கருவியானது மரத்தினால் செய்யப்பட்டு, தோலால் கட்டப்பட்டது. துளைக் கருவி என்பது மரத்தினாலும், உலோகத்தினாலும் செய்யப்படுவது. நரம்புக் கருவி எனப்படுவது மரத்தினால் செய்யப்பட்டு நரம்புகள் அல்லது கம்பிகளால் பூட்டப்பட்டவை ஆகும். கஞ்சக் கருவி எனச் சொல்லப்படுவது வெண்கலத்தால் செய்யப்பட்ட இசைக் கருவியைக்” குறிக்கும். தமிழ் செம்மையுற, தமிழிசையும், தமிழிசைக் கருவிகளும் உறுதுணையாய் இருந்தன.

## பரிபாடலில் இசைக் குறிப்புகள்

இசையின் வடிவங்கள் தமிழில் பலவாகும். தமிழிசை, நாட்டுப்புற இசை, கர்நாடக இசை, மெல்லிசை, திரை இசை, சொல்லிசை, தமிழ் பாப் இசை, துள்ளிசை, தமிழ் இயைபிசை, தமிழ் கலப்பிசை என எண்ணற்ற இசை வடிவங்கள் தமிழில் உள்ளன. தமிழ்ச் சூழலில் வளர்ச்சி பெற்ற இசையே தமிழிசை எனப்படுகிறது. எட்டுத்தொகை நூல்களுள் ஒன்றான பரிபாடலில் பல்வேறு இடங்களில் இசை பற்றிய செய்திகள் காணக்கிடக்கின்றன. இவ்இசையைப் பற்றி உரையாசிரியர்கள்,

**“ஒரு பாட்டாகி முற்றுப் பெறுவது”**

எனப் இளம்பூரணரும்,

**“கவியுறுப்பு பலவடிவம் ஏற்றுவருவது”**

என பேராசிரியரும்

கூறுவது இங்கே கவனிக்கத்தக்கது. “பரிபாடல்” என்னும் நூலைக் குறிக்கப் பெறும்போது, “ஓங்கு பரிபாடல்” எனக் கூறுவதே இசை அமைதியை உடையது எனப் பொருள்படுகிறது. இந்நூலில் கிடைத்துள்ள 22 பாடல்களிலும் தனித்தனி இசையை, ஓசையை அமைத்தவர் என்பதை,

**“எழுதினர் பிழைப்பும் எழுத்துரு ஒக்கும்
பகுதியின் வந்த பாடகர் பிழைப்பும்”.**[5]

என்றபாடல்வரி உணர்த்துகிறது. இப்பரிபாடலுக்கு பண் வகுத்த இசைப்புலவர்கள், பண்பெயர்கள் ஆகியன அறியமுடிகிறது. அவர்களுள் பெட்டனாகனார், நாகனார், நன்னாகனார், நல்லச்சுதனார் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர். “யாப்பருங்கல விருத்தியுரைக்காரர், “செந்துறை மார்க்கம் ஆமாறு. நாற்பெரும் பண்ணும்

இருபத்தொரு திறனும் ஆகிய இசையெல்லாம் செந்துறை. செந்துறை என்பது பாடற்கேற்பது. செந்துறை விரி மூவகையாகும். செந்துறையும், செந்துறை செந்துறையையும், வெண்டுறச் செந்துறையும் எனவாகும். அவற்றுள் செந்துறைப் பாட்டென்பது பரிபாடலும், மகிழிசையும் ஆகும்.

பரிபாடல் ஓர் இசைக்களஞ்சிய நூல் என்பதற்கு விபுலானந்த அடிகள் தம் "யாழ் நூல்" என்னும் இசைத்தமிழ் நூலில், "நமக்குக் கிடைத்த பரிபாடல்களின் நலத்தினை நோக்கி, தலைச்சங்கத்தார் புனைந்த எண்ணிறந்த பரிபாடலகள் எத்தனை வளம் சிறந்தனவோ என எண்ணி உளமுருகின்றோம். பாடல் பின்னாகப் பாடல் துறையும், பாடினார் பெயரும், பண்ணின் பெயரும், இசை வகுத்தார் பெயரும் தரப்பட்டிருக்கின்றன. நாகனார் பெட்ட நாகனார், நன்னாகனார், கண்ணனாகனார் என நின்ற பெயர்களை நோக்குமிடத்து இசைவகுத்த பாணர் நாக குலத்தினராமோ என எண்ண வேண்டியிருக்கிறது. கேசவனார், நல்லச்சுதனார் என்போர் பாடினராகவும், இசை வகுத்தோராகவும் இருக்கின்றனர். இவர் தாம் வகுத்த இசையினைத் ஒரு முறைப் பற்றி எழுதியிருத்தல் வேண்டும். அம்முறை பற்றிய இசைக்குறியும் நமக்குக் கிடைத்தில".[6] என்று குறிப்பிட்டுள்ளார். "கடைச்சங்கப் புலவர்களால் பாடப்பெற்ற எழுபது பாடலும், கூத்தும், வரியும், சிற்றிசையும், பேரிசையும் என்று இத்தொடக்கதன" என்று வருவதைக் காணும்போது, பரிபாடல் இசைத்தமிழால் சிறப்புற்றுத் திகழ்ந்தது என அறிய முடிகிறது. இவற்றினால், பரிபாடல் என்னும் நூலானது முழுநிலைப் பண்ணமைதி பெற்ற பாடல் எனவும் தெளியலாம்.

## மிடற்று இசை

"பஞ்ச மரபு" என்னும் இசைத்தமிழ் நூல் இசை மரபு, வாக்கிய மரபு, நிருத்த மரபு, அபிநய மரபு, தாள மரபு ஆகிய ஐந்து மரபுகளைக் கூறுகிறது. இத்தகைய இசை பற்றிய குறிப்புகளைக் காணும்போது அக்காலத் தமிழர்கள் இசைச் சூழலுக்கேற்ப இசைப்புகளைத் தோற்றுவித்தார்கள் எனலாம். பரிபாடலில் காணப்படும் இந்தமிடற்று இசைப்பாட்டு இசைக் கருவிகளோடு ஒத்திருக்கும் என்பதை,

**"விரல்செறி தூம்பின் விடுதுளைக்கு ஏற்ப**
**முரல்குரல் தும்பிஅவிழ் மலர் ஊத**
**யாணர் வண்டினம் யாழிசை பிறக்கப்**
**பாணிமுழலிசை அருவிநீர் ததும்ப**
**ஒருங்கு பரந்தவை யெல்லாம் ஒலிக்கும்**
**இரங்கு முரசினான் குன்று".[7]**

என்ற பாடல்வரி விளக்குகிறது. இப்பாடலில் அதிக சுர வேறுபாடு இல்லாத தும்பியின் ஒலியைக் கொண்டு வண்டின் சுர வேறுபாடு காட்டப்பட்டுள்ளது. இது ஒரு இயற்கை நிகழ்வு என்றாலும், இயற்கை அடிப்படையிலான ஒலியைக் கொண்டே மிடற்று இசைப் பாடல்கள் பாடப்பட்டன. இது தட்பவெப்ப சூழ்நிலைக்கேற்ப மாறும் தன்மை கொண்டது. இவ்வாறு அடிப்படையில் ஒலி நிலையின் தளத்தில் மிடற்றுப் பாடலும், கருவி இசையையும் இயக்குவதற்கு புலவனின் இயற்கையுணர்வும் காரணமாகிறது என்பதை,

**"ஒருதிறம் பாணர் யாழின் தீற்குரலெழ**
**ஒருதிறம் யாணர் வண்டின் இமிரிசை யெழ**
**ஒருதிறம் கண் ஆர் குழலின் கரைபு எழ**
**ஒருதிறம் பண் ஆர் தும்பி, பரந்து இசை ஊத**
**ஒருதிறம் பண் ஆர் முழவின் இசைபாட**
**மாறட்டான் குன்றும் உடைத்து".[8]**

என்ற பாடல் வரிகளால் உணர்த்துகிறது. முருகவேளினது திருப்பரங்குன்றத்திலே மாறுபட்டு இசைக்கும் இசை வேறுபாடுகள் பகைவரை வெல்லும் தன்மை கொண்டது. அதாவது பாணர் இசைக்கும் யாழின் ஒலி ஒருபுறம் எழ, மறுபுறம் வண்டுகள் முரன்று ஒலிக்கும் இசை தோன்றியது. கணுப்பொருந்திய குழலிடத்தே ஒருபுறம் இசை எழ, பண்ணிசையாய் வண்டுகள் பறந்து மறுபுறம் ஒலி எழுப்பின. மண்புசப் பெற்ற முழவிலிருந்து ஒருபுறம்

இசைஎழ, மறுபுறம் உயர்ந்த மலையிலிருந்து அருவி நீர் ஆர்ப்பரித்துக் கொட்டும் என்று இசையெழும் தன்மை விளக்கப்படுகிறது. இதனால் அக்கால மக்களின் பண்ணிசையும், இயற்கைக் கூறுகளின் குரலிசையும் மாறி மாறி பாடலில் அமைந்துள்ள முறையைக் காண முடிகிறது.

### குழலிசை

பரிபாடலில் குழலிசை குறித்த நுட்பமான செய்திகள் பல இடங்களில் காணக்கிடக்கின்றன. திருமருத முன்றுறைக்கண், நீராடலின் போது மிகுந்த மகிழ்ச்சியாகவும், ஆடலும் பாடலுமாக இருந்திருக்கின்றனர் என்பதைப்,

**"புரிநரம்பு இன்கொளைப் புகல்பாலை ஏழும்**
**ஏழூஉப் புணர் யாழும் இசையும் கூட**
**குழல்அளந்து நிற்ப முழவெழுந்து ஆர்ப்ப**
**மன்மகளிர் சென்னியர் ஆடல்தொடங்கும்".**[9]

என்ற பாடல்வரிகள் சுட்டுகின்றன. அதாவது, பழந்தமிழக மக்களிடம் அரங்கிசை இருந்ததை உறுதி செய்கிறது. பாலைப்பண் யாவராலும் விரும்பிக்கேட்கும் இசைத்தன்மை கொண்டது. இது செம்பாலை, படுமலைப்பாலை, செவ்வழிப்பாலை, அரும்பாலை, கோடிப்பாலை, விளரிப்பாலை, மேற்செம்பாலை என ஏழுவகைப் பாலைகளாகக் காணப்படுகிறது. சுரக் கருவிககள் ஏழு என்பது போல ஏழு பாலைக் பருவிகள் இருந்ததையும், அவற்றை இசைக்கும் திறன் பெற்றவர்களாகச் சங்கப் புலவர்கள் விளங்கியதையும் "அறிய முடிகிறது. தமிழர்களின் யாழ் கருவியானது ஏழ்பாலையும், இசைத்தன்மையையும் சூழல் சுருதியளர்ந்து நின்றமையையும் விளக்குகிறது. குழல் ஒற்றிசையாகப் பயன்பட்ட பாங்கையும், குழல் ஒலியின் பின்னணியில் ஏனைய கருவிகள் தாளவறுதி செய்ததையும் பரிபாடல் உணர்த்துகிறது. மகளிரின் இசை ஆட்டங்களை,

**"ஒத்த குழலின் ஒலியெழ முழவிமிழ்**
**மத்தரி தடாரி தண்ணுமை மகுளி**
**-----------------------------------**
**-----------------**
**அத்தக அரிவையர் அளத்தல் காண்மின்".** [10]

என்ற பாடல் வரிகள், ஆடல் மகளிரின் கூத்தாட்டங்களைப் பிரதிபலிக்கின்றன. "வையை ஆற்றில் நீராட வந்த ஆடல் மகளிர்கள் தம்முள் தாம் ஒருவருக்கு ஒருவர் பிற்படாதவர் எனக்கூறும் அளவுக்கு ஆடினர். வங்கியத்திலிருந்து (இசைக்குழல்) இசை எழுந்து, முழவு, மத்தரி, தடாரி, தண்ணுமை, மகுளி என்னும் இசைக்கருவிகளின் ஓசைகளை உடைய தாளத்தை அளந்து, தமது வளையலணிந்த முன் கைகளினால் அத்தாளத்தை அசைத்தனர்". அதைக் காணுங்கள் என அழைப்பதாக அமையப்பெற்றுள்ளது.

### யாழிசை

சங்க காலத்தில் மிடற்றை வைத்துப் பாடும் பாடகர்களுக்குத் துணையாக நரம்புக் கருவி ஒன்றும், துணைக்கருவி ஒன்றும், தாளக்கருவி ஒன்றும் அமைத்து, ஐந்தியல் நெறிப்படி இசையரங்கு கூட்டப்பட்டு உள்ளது. இதை வடமொழியாளர்கள், "பஞ்சமாசத்தம்" என்பர். இவற்றுள் யாழ், வீணை, கின்னரம் என்பன நரம்புக் கருவிகள் ஆகும். இந்நரம்புக் கருவிகள் பழந்தமிழர்களால் பெரிதும் போற்றப்பட்டன. உருவ அமைப்பில் யாழ்க் கருவி வில்லைப் போன்றது. யாழுக்கு "வீணை" என்று பண்டைக் காலத்திலிருந்தே வழங்கப்பட்டு வந்துள்ளது. யாழ் வாசிப்பதில் வல்லவரான பாணர்கள் தமிழகத்தில் வாழ்ந்தனர். அதனால்தான் இவர்களை "யாழ்ப்பாணர்" என்றழைத்தனர். "யாழ்" என்ற சொல் கி.பி.11 ஆம் நூற்றாண்டிற்குப் பிறகு வழக்கொழிந்து விட்டதால், தற்பொழுது "வீணை" என்னும் சொல்லே வழக்கில் உள்ளது. முற்கலை அரங்கிசையில் யாழ், குழல், மிடற்றுப் பாடல், ஆடல் ஆகிய நான்கும் இணைந்தே பாடல்களில் இசைக்கப்பட்டு வந்துள்ளன என்பதை,

**"ஏழ்புழை ஐம்புழை யாழிசை கேழ்த்து**
**அன்ன, இனம்**
**வீழ்தும்பி வண்டொடு மிஞிறு ஆர்ப்ப".** [11]

என்று பரிபாடல் உணர்த்துகிறது. அதாவது, ஏழு துளையுடைய குழல், ஐந்து துளையுடைய குழல், யாழ் ஆகியவற்றினிடத்தில் பிறந்த இசையைப் போன்று நிறத்தால் ஒத்த தம் இனத்தை விரும்பும் தும்பி, வண்டு, மிஞிறு ஆகியவை இனிய இசையினை முழக்கின என்று திருப்பரங்குன்றத்திலிருந்து மதுரைக்கு செல்லும் வழியின் சிறப்பைக் கூறும்போது வண்டினங்கள் இசைக்கும் இசையைப் பதிவு செய்துள்ளனர் தமிழர்கள். இதன் மூலம் அக்கால இசைக்கலைஞர்கள் மூன்று வேறுபட்ட இசைக்கருவியின் தன்மையை நுண்மையாகக் அறிந்திருந்தனர் என்பது தெளிவாகத் தெரிகிறது. அதேபோல குழலின் இசையைத் துளைகளில் கையை வைத்துப் பார்த்து, அதன் ஒலித்தன்மையையும் அறிந்துள்ளனர் தமிழர்கள்.

செவ்வேள் வீற்றிருக்கும் திருப்பரங்குன்ற மலையின் சிறப்பைக் கூறும்போது, பாண்டியன் வழுதி தன் பரிவாரங்களோடு வலம் வருகையில் கண்ட காட்சி அறியத்தக்கது. பலருடன் சேர்ந்து வருவதால் ஒவ்வொருவரும் தத்தமக்கு இயைந்த ஒலிகருவிகள் வாயிலாக இசையினை இயக்கி மகிழ்வுடன் வந்தினர் என்பதைப் பரிபாடல்,

**"கைவைத்து இமிர்பு குழல் காண்குவோரும்,**
**யாழின் இனிகுரல் சமம் கொள்வோரும்,**
**வேள்வியின் அழகுஇயல் விளம்புவோரும்,**
**கூர நாண்குரல் கொம்பென ஒலிக்க,**
**ஊழ்உற முரசின் ஒலி செய்வோரும்".[12]**

என்னும் பாடல்வரிகளால் அறியச் செய்கிறது. மன்னன் கூட இருக்கும் சான்றோர் கூட்டத்துள் யாழ், முரசு ஆகிய இசைக்கருவிகள் கொண்டு வழிப்பயணம் தெரியாமல் இருக்க இசைகளை இசைத்த வண்ணமாய்ச் சென்றுள்ளனர். சிலர் தெய்வத்தன்மை கொண்ட பிரம வீணையை மீட்டி இசைத்தனர். சிலர் வேய்குழலிடத்தே விரல்களை வைத்து ஊதி இசையை அளவிட்டனர். சிலர் யாழின்கண் இளிவாய்ப் பாலையையும், குரல்வாய்ப் பாலையையும் வலிய, மெலியத் தாக்காமல், சமனாகத் தாக்கி அதன் இன்பத்தை நுகர்ந்தனர். சிலர் யாழின் நரம்போசை கொம்மென ஒலித்த அளவில், அத்தாளத்திற்கு ஏற்ப முரசொலியை எழுப்பினர் என்று அறியும் போது இசை வல்லுநர்கள் தமிழர்கள் எனத் தெரிகிறது.

தைநீராடுதல் நிகழ்ச்சியின் போது தோழி ஒருத்தி கூறும் செய்தியில், நரம்புக் கருவியான இசைக்கருவி எழுப்பும் அழகை மிகவும் நேர்த்தியாகக் கூறுகின்றாள். மகளிர் தாம் அணிந்த நீலநிறமுடைய, விளைந்து முதிர்ந்த தேன் நிறைந்த மலர்மாலையில் உள்ள தேனை உண்ண இசை எழுப்பும் வண்டு களின் இனிய ஓசையானது யாழிசைப் பாடல போலிருந்தது என்பதைப்,

**"புஊது வண்டினம் யாழ்கொண்ட கொலை கேண்மீன்,**
**கொலைப் பொருள் தெரிதரக் கொளுத்தாமல், குரல்கொண்ட**
**கிளைக்கு உற்ற உழைக் கரும்பின் கேழ் கெழு பாலைஇசை ஓர்மின்**
**பண்கண்டு திறன் எய்தாப் பண் தாளம் பெறப் பாடி**
**கொண்ட இன்னிசைத் தாளம் கொளை சீர்க்கும்".[13]**

என்ற பாடல் வரிகள் உணர்த்துகின்றன வண்டினங்கள் பாடும் பாடல்கள் பண்ணிற்குரிய பொருளறிந்து பாடப்படாது இருக்க, குரல் கொண்ட கிளையாகிய இளிக்கு உறவாகப் பொருந்தும் உழை குரலான நிறமுள்ள வண்டினது அரும்பாலையில் தோன்றிய மருதப் பண்ணின் இசையையும், விளரிப் பாலையில் தோன்றும் யாம யாழினைத் தாளத்துடன் பொருந்தப் பாடி, அத்தாளத்திற்கும் பாட்டின் சீருக்கும் ஏற்றவாறு தமது சிறகுகளை விரித்து ஆடுகின்ற தும்பிகளின் கூட்டத்தைப் பாருங்கள் என்று தோழி கூற்றாக அமைந்துள்ளது.

இயற்கையோடு ஒன்றி, வாழ்க்கைக்குத் தேவையான உடல், மன வளர்ச்சி ஆகியவற்றை விழா எடுப்பதன் வாயிலாகத் தெளி வுபடுத்திய தமிழர்கள், விழாக்களின் அங்கமாக இசைகளும் திகழ்ந்தன என்பதை அறியச் செய்கின்றனர்.

**பறையிசை**

வையை நீராட்டு விழாவிற்கு வந்த மகளிர்களின் உள்ளத்தில் மகிழ்ச்சி பொங்கி புரித்த நேரத்தில். தோளில் அணிந்த வளையல் முன்கையிடம் வந்து அலைத்தது. மேனியில் ஓவியமாக எழுதப்பட்ட கொடிகள் அழிந்தன. அழகிய ஒளி மிக்க முத்துமாலையில் சந்தனம் முதலியவை பூசப்பட்டமையால் தம் ஒளியை இழந்தது. காதலர்கள் தம் மார்பில் அணிந்த அணிகளும் தம்முள் கூடின. இவர்களது மகிழ்ச்சியை உடைத்தது போலவே வையையாற்று வெள்ளம் மலைபோன்ற அணைகளை உடைத்தது. உடைந்த கரையை உடைப்பதற்கு, "ஆள் எழுந்து வருக" என்று கூறும்போது பறைக்கருவி மூலம் தெரிவிக்கின்றான். இதனைப் பரிபாடல்,

> **"-------------------------------------**
> **--------------------------- வையைத்**
> **திரைச்சிறை உடைத்தன்று கரைச்சிறை "அறைக" எனும்**
> **உரைச்சிறைப் பறைஎழ, ஊர் ஒலித்தன்று".[14]**

என்ற வரிகளால் உணர்த்துகிறது. ஆற்றின் கரைகளை உடைக்காமல் காவல் காக்கும் காப்பாளன், வையை ஆறு தம் அலைகளால் கரையை உடைக்கும்போது பறைக்கருவி மூலம் இசையெழுப்பி, ஊர்மக்களுக்கு அபயக்குரல் கொடுத்து, கரையை அடைக்க வாருங்கள் எனத் தெரிவிக்கின்றான்.

**நிறைவுரை**

தமிழக இசைக்கலை மிகவும் பழமையானது. இன்று இசையானது அறிவியல் தொழில் நுட்ப வளர்ச்சியால் வளர்ந்துவிட்டது. தமிழகத்தில் தோன்றிய இசைக்கலை காலத்தால் முற்பட்டது என்பதை முத்தமிழ்க் காப்பியம் சிலப்பதிகாரம் உணர்த்தியுள்ளது. இசைக்கலை பற்றிய விவரிப்பு, இசைத் திறனையும், இசைப்பாடல்கள் பற்றிய செய்தியையும் பரிபாடல் தெளிவுபடுத்துகிறது.

**குறிப்புகள்**


1. சுபாஸ் சந்திரபோஸ், *தொல்காப்பியம் பொருளதிகாரம்*, ப.252.
2. சுபாஸ் சந்திரபோஸ், மேலது, ப.257.
3. சுபாஸ் சந்திரபோஸ், மேலது, ப.257.
4. சுபாஸ் சந்திரபோஸ், மேலது, ப.392.
5. சுபாஸ் சந்திரபோஸ், பரிபாடல், உரைச்சிறப்புப் பாயிரம், 11-12.
6. விபுலானந்த அடிகள், யாழ்நூல், ப.16.
7. கு.வெ. பாலசுப்பிரமணியன், பரிபாடல், (21:33-38)
8. கு.வெ. பாலசுப்பிரமணியன், மேலது, ப.454.
9. கு.வெ. பாலசுப்பிரமணியன், மேலது, ப.185.
10. கு.வெ. பாலசுப்பிரமணியன், மேலது, ப.377.
11. கு.வெ. பாலசுப்பிரமணியன், மேலது, ப.189.
12. கு.வெ. பாலசுப்பிரமணியன், மேலது, ப.496.
13. கு.வெ. பாலசுப்பிரமணியன், மேலது, ப.352.
14. கு.வெ. பாலசுப்பிரமணியன், மேலது, ப.134.